பேரூராட்சிப் பகுதிகளிலே இருப்பவர்களுக்குத் தேவையான கால்நடைகள் அதிக அளவில் இருக்கின்ற காரணத்தினாலே, இன்றைக்கு கால்நடை மருத்துவர்களும் நமக்கு அதிக அளவில் தேவைப்படுகிறார்கள். தேவையின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு இன்றைக்கு ஏறத்தாழ 818 கால்நடை மருத்துவர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டாலும்கூட, அவர்களை நிரந்தரம் செய்வதற்குண்டான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, இன்னும் எந்தெந்தப் பகுதிகளில் எல்லாம் கால்நடை மருத்துவர்கள் தேவையோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் கால்நடை மருத்துவமனைகளையும், கால்நடை கிளை நிலையங்களையும் உடனடியாக ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

ஆரம்ப சுகாதார நிலையம்

***3479—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, கோபிசெட்டிபாளையம் ஒன்றியம், P. மேட்டுப்பாளையம் பேரூராட்சி, கவுண்டம்பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்தியூர் தொகுதி, கோபிசெட்டிபாளையம் ஒன்றியம், P. மேட்டுப்பாளையம்

பேரூராட்சி, கவுண்டம்பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பிறகு, அம்மா அவர்களின் பாதையில் சிறப்பாக ஆட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அம்மாவின் ஆட்சிக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேச வாய்ப்பு கொடுத்த தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கோபி ஊராட்சி ஒன்றியம், P. மேட்டுப்பாளையம் பேரூராட்சி, சுமார் 12,000 மக்கள்தொகையைக் கொண்ட பேரூராட்சியாகும். இப்பகுதியிலுள்ள மக்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டும் என்றால், கவுந்தப்பாடி அல்லது ஆப்பக்கூடல் செல்ல வேண்டும். இவ்விரண்டும் பவானி தொகுதியைச் சார்ந்ததாகும். எனவே, P. மேட்டுப்பாளையம் பேரூராட்சிப் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தால் P. மேட்டுப்பாளையம் பகுதி மக்கள் மட்டுமல்லாமல் பெருந்தலையூர் ஊராட்சி மக்களும் பயன்பெறுவார்கள் என்பதால், ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியில் மக்கள்தொகையும் குறைவாக

இருக்கின்றது. மேலும், மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கவுந்தப்பாடி என்ற இடத்தில் அரசு மருத்துவமனை இருக்கிறது. ஆப்பக்கூடல் என்ற இடத்தில் இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. எனவே, வரும் காலத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை அப்பகுதியிலுள்ள மக்கள்தொகைக்கு ஏற்ப அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பிரம்மதேசம், வேம்பத்தி ஊராட்சி போன்றவை பெரிய ஊராட்சிகளாகும். எனவே, அப்பகுதியில் இரண்டு ஊராட்சிகளில் உள்ள மக்களும் பயன்பெறும்வகையிலே, இந்த இரண்டு ஊராட்சிகளின் மத்தியிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தால், அப்பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கலந்து பேசி, கருணை உள்ளத்தோடு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டும்விதமாக, அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு ஆய்விற்கு வந்தபோது, அந்த மருத்துவமனைக்குத் தேவையான படுக்கை வசதி, கட்டட வசதி, scan வசதி உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தோம். ஏனென்றால், அந்தியூர் தொகுதி, பர்கூர் ஊராட்சிப் பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு வருவதென்றால் சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் வர வேண்டும். Scan வசதி உள்ளிட்ட பிற வசதிகளுக்கு ஈரோடு செல்லவேண்டும் என்றால் மீண்டும் 40 கிலோ மீட்டர் செல்ல வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தியூர் தாலுகா அரசு மருத்துவமனைக்குத் தேவையான வசதிகளை கண்டிப்பாகச் செய்து தருவேன் என்று தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். NEET தேர்வில்கூட தமிழக அரசின் நிலையை நெத்தியடியாகத் தெரிவித்து, நாட்டு மக்களுக்கும், இந்த அவைக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். ஒரு இன்ப சந்தோஷமாக அந்தியூர் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனைக்குத் தேவையான வசதிகளை செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள்வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்பம், சந்தோஷம், மகிழ்ச்சி மூன்றையும் சேர்த்திருக்கிறார். அந்தியூருக்கு நானே நேரடியாகச் சென்றேன். உண்மையிலேயே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களை பாராட்ட வேண்டும். Involvement–உடன் அங்கிருக்கின்ற மருத்துவர்கள், செவிலியர்களுக்கெல்லாம் தேவையான வசதிகளையெல்லாம் செய்து கொடுத்திருந்தார். நான் நேரிலே பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தியூர் மருத்துவமனைக்கு என்னென்ன வசதிகளையெல்லாம் எதிர்பார்க்கின்றாரோ, அந்த வசதிகளையெல்லாம் அவசியம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டே செய்து கொடுக்கப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன் அவர்கள்.

திரு. P. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், எங்கள் மண்ணின் மைந்தர், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. கடம்பூர் ராஜூ அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு

முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவிற்கு தூத்துக்குடிக்கு வருகை தந்தபோது, விளாத்திகுளம் தொகுதி, சிவஞானபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

நடந்து முடிந்த விளாத்திகுளம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலிலே மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சி என்றென்றும் தொடர வேண்டுமென்று சிவஞானபுரத்தில் மட்டும், 5,000-க்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தை மக்கள் அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிவஞானபுரத்தைச் சுற்றி, 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. அவர்கள் அனைவரும் மருத்துவ சிகிச்சைக்காக 20 கி.மீ. தொலைவில் உள்ள குளத்தூருக்கும், 20 கி.மீ. தொலைவில் உள்ள எப்போதும்வென்றான் பகுதிக்கும், 30 கி.மீ. தொலைவில் உள்ள கோவில்பட்டிக்கும், 25 கி.மீ. தொலைவில் உள்ள விளாத்திகுளத்திற்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகையால், சிவஞானபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணியை விரைவுபடுத்தி, விரைவில் தொடங்கிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து ஆரம்ப சுகாதார நிலையங்களை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உருவாக்கிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய சிவஞானபுரம் பகுதியை, ஏற்கெனவே மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து எனக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கிறார். தூத்துக்குடி மாவட்டத்தில் சிவஞானபுரம், வானரமுட்டி என்ற இரண்டு இடங்களும் அரசினுடைய மிகக் கனிவான பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆத்மாவை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எனது தொகுதிக்குட்பட்ட கருவேப்பிலங்குறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தியும், அதற்கு போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால், புதிய கட்டடங்கள் அமைத்துத் தரவும் அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

தென்னை ஆராய்ச்சி நிலையம்

***25056—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட தொண்டியக்காடு, கரையாங்காடு, ஜாம்புவானோடை, கற்பகநாதர்குளம் ஆகிய பகுதிகளில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?